செய்தி வெளியீடு எண்:441 நாள்:14.07.2021

# நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய தரவரிசை குறியீடு 2020 - 21 குறித்த மாநில அளவிலான கருத்தரங்கம் (பட்டறை)

நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய தரவரிசை குறியீடு, 2020 - 21 மற்றும் பற்பரிமாண வறுமை குறியீடு எனும் தலைப்பில் அவற்றின் முக்கிய அம்சங்கள் குறித்த மாநில அளவிலான கருத்தரங்கம் (பட்டறை) தமிழக அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையால், நித்தி ஆயோக் அமைப்புடன் இணைந்து சென்னை தலைமைச் செயலகத்தில் 2021 ஜீலை, 12 மற்றும் 13 ஆம் தேதிகளில் பழைய கருத்தரங்கு கூட்ட அரங்கில் நடத்தப்பட்டது. இதில் நித்தி ஆயோக் அமைப்பின், நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான ஆலோசகர் திருமதி. சன்யுக்தா சமத்தார், இ.ஆ.ப., அவர்களின் தலைமையிலான அணியில் நித்தி ஆயோக் அமைப்பின் அலுவலர்கள் பங்கேற்றனர். திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற இந்த பட்டறையில் தமிழக அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் / அரசு முதன்மைச் செயலாளர்கள் / அரசு செயலாளர்கள் நேரிடையாகவும், துறைத் தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் காணொலி வாயிலாகவும் பங்கேற்றனர். இந்த பட்டறையின் துவக்கத்தில், சமீபத்தில் வெளியிடப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய தரவரிசை குறியீடு 2020 - 21 ஆவணத்தை நித்தி ஆயோக் அமைப்பின் ஆலோசகர் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் (ம) வளர்ச்சி அவர்களிடம் வழங்கினார். மேலும், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையால் வடிவமைக்கப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் தமிழக புள்ளி விவரங்கள் அடங்கிய தொகுப்பேடு 2020 அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் வெளியிட, நித்தி ஆயோக் அமைப்பின் ஆலோசகர் பெற்றுக் கொண்டார்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதில் தமிழக அரசின் உறுதிப்பாட்டினை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் (ம) வளர்ச்சித் துறை அவர்கள் தனது முக்கிய குறிப்பு உரையில் தெரிவித்தார்.

மேலும், அவர், ''எல்லோருக்கும் எல்லாம்'' என்ற தமிழக அரசின் அடிப்படை கொள்கையை தெரிவித்ததோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தொலைநோக்கு பார்வையில் அடையாளம் காணப்பட்ட, பொருளாதாரம், வேளாண்மை, குடிநீர் வசதி, கல்வி, நகர் பகுதிகள் மேம்பாடு, ஊரகப் பகுதிகளின் கட்டமைப்பினை மேம்படுத்துவது மற்றும் சமூக நீதி ஆகிய ஏழு முக்கிய துறைகளில் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடுத்த 10 ஆண்டுகளுக்குள் அடைய வேண்டிய இலக்குகள், நீடித்த வளர்ச்சி இலக்குகளோடு ஒத்திசைவதாக உள்ளது என்று தெரிவித்தார்.

நித்தி ஆயோக் அமைப்பின், நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான ஆலோசகர் திருமதி. சன்யுக்தா சமத்தார், இ.ஆ.ப., அவர்கள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய தரவரிசை குறியீடு 2020 - 21இல் ஒட்டுமொத்த இலக்குகளில் தமிழ்நாட்டின் முன்னேற்றம், ஒவ்வொரு இலக்கிலும் தமிழகத்தின் நிலை மற்றும் தமிழ்நாட்டில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கு தொடர்ந்து கருத்தில் கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய அம்சங்களை தனது விளக்கப்படக் காட்சியின் மூலம் எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட மாநில துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைகளின் சார்பாக பங்கேற்ற அலுவலர்கள் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் உள்ள தங்கள் துறை சார்ந்த குறிகாட்டிகள் குறித்து கருத்துக்களை பகிர்ந்தனர். முதன்மைச் செயலாளர் / ஆணையர், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை அவர்களின் நிறைவுரையுடன் முதல் நாள் பட்டறை நிறைவு பெற்றது.

இரண்டாம் நாள் கூட்டத்தில், பற்பரிமாண வறுமை குறியீடு (Multidimensional Poverty Index) குறித்தும், அவற்றை கணக்கிடுவதற்காக எடுத்துக் கொள்ளப்படும் குறிகாட்டிகள் குறித்தும், குறிகாட்டிகளுக்கான தரவுகளை மதிப்பெண்களாக கணக்கிடும் முறை குறித்தும், உலக நாடுகள் அளவில் வெளியிடப்பட்ட தரவரிசை குறியீட்டில் இந்தியாவின் மதிப்பெண்கள், தமிழ்நாடு மாநில அளவில் மற்றும் தமிழகத்தில் உள்ள மாவட்ட வாரியான

மதிப்பெண் ஆகியவை குறித்தும் விவாதிக்கப்பட்டது. தேசிய அளவிலான முதல் பற்பரிமாண வறுமை குறியீடு ஆகஸ்ட் 2021 மாதத்தில் வெளியிடப்படவுள்ளதாக நித்தி ஆயோக் ஆலோசகர் தெரிவித்தார். இந்த விவாதங்களின் போது, தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள், இத்தரவரிசை குறியீட்டிற்காக, எடுத்துக் கொள்ளப்படும் குறிகாட்டிகள் குறித்து தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தினர். மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவின் உறுப்பினர் செயலாளர் அவர்களின் நன்றியுரையுடன் இந்த இரண்டு நாள் கருத்தரங்கம் நிறைவுற்றது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9